**ஜூலை – 13**


# TNPSC துளிகள்

- சுரங்கத் துறை அமைச்சகமானது முதன்முறையாக அல்ட்ராடெக் சிமெண்ட் நிறுவனத்தின் நவோகாரி சுண்ணாம்புக் கல் சுரங்கம், டாடா ஸ்டீல் நிறுவனத்தின் நோமுண்டி இரும்புத் தாது சுரங்கம் மற்றும் சந்தூர் மாங்கனீசு மற்றும் இரும்புத் தாது லிமிடெட் நிறுவனத்தின் கம்மாத்தாரு சுரங்கம் ஆகிய மூன்று சுரங்கங்களுக்கு ஏழு நட்சத்திர அந்தஸ்த்தை வழங்கியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் விஜயவாடாவில் உள்ள இந்திரகீலாத்ரி மலையில் உள்ள கனக துர்கா கோவிலில் மூன்று நாட்கள் அளவிலான சாகம்பரி என்ற விழாவானது நடத்தப் பட்டது.
- கேரளாவின் முதல் தோல் வங்கியானது, விரைவில் திருவனந்தபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொடங்கப்பட உள்ளது.
- வூலா டீ எனும் அசாமின் முதல் பொதி இல்லாத தேயிலை விற்பனை நிறுவனத்திற்கு, அதன் புதுமையான 'அழுத்தப்பட்ட அசலான முழு தேயிலை அடங்கிய தேநீர் அமிழ்வுப் பொதி மற்றும் அதன் தயாரிப்பு முறைக்கு' 20 ஆண்டு காலக் காப்புரிமை வழங்கப்பட்டுள்ளது.
- 100 ஆண்டுகளுக்கும் மேலான வயதுடைய ஆசியாவின் வயதான பெண் யானை என்று கருதப்படும் வத்சலா, மத்தியப் பிரதேசத்தின் பன்னா புலிகள் வளங் காப்பகத்தில் உயிரிழந்தது.
- பஞ்சாப் மாநில அரசானது, வருமானத்தைப் பொருட்படுத்தாமல், மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆண்டிற்கு 10 லட்சம் ரூபாய் வரையில் இலவச மற்றும் பணமில்லா மருத்துவச் சிகிச்சை அளிப்பதை உறுதியளிக்கும் முக்கிய மந்திரி சேஹத் யோஜனா எனும் ஒரு பொது சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் BHIM செயலியின் மூலம் மிக ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினை (UPI) பயன்படுத்தி நிதிப் பரிவர்த்தனைகளைச் செயல்படுத்தும் முதலாவது கரீபியன் நாடுகளாக டிரினிடாட் மற்றும் டொபாகோ ஆகியவை மாறி உள்ளன.
- இந்தியக் கடலோரக் காவல்படை மற்றும் ஜப்பானியக் கடலோரக் காவல்படை ஆகியன சென்னையில் ஜா மாதா (ஜப்பானிய மொழியில் "பின்னர் சந்திப்போம்" என்று பொருள்படும்) என்ற குறியீட்டுப் பெயரில் ஒரு கூட்டுப் பயிற்சியை நடத்தி வருகின்றன.
- 11வது இந்திய மக்காச் சோள உச்சி மாநாடானது புது டெல்லியில் நடைபெற்றது.
- பச்சிளம் குழந்தைகளுக்காக என்று நன்கு வடிவமைக்கப்பட்ட Coartem® Baby எனும் (ஆர்டிமெதர்-லூமேபான்ட்ரின்) மலேரியா மருந்திற்கு சுவிட்சர்லாந்து முதல் கட்ட ஒப்புதலை வழங்கியுள்ளது.
- பல்கேரியா நாடானது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் யூரோ மதிப்பினை ஏற்றுக் கொள்ள ஒப்புதல் அளித்துள்ளதுடன் யூரோ மதிப்பு மண்டலத்தின் 21வது உறுப்பு நாடாக இது மாற உள்ளது.
- அடையாளம் தெரியாத பறக்கும் பொருள் (UFO) பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே மிகவும் நன்கு பரப்புவதற்காகவும், அறிவியல் சிந்தனையை

ஊக்குவிப்பதற்காகவும், உலக UFO தினம் ஆண்டுதோறும் ஜூலை 02 ஆம் தேதி அன்று அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நகரங்களில் வெப்ப அழுத்தம்




- "நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வெப்ப அழுத்தம்: தமிழ்நாட்டில் கட்டமைக்கப்பட்டப் பகுதி மற்றும் பருவநிலை தொடர்புகளின் தசாப்த கால மதிப்பீடு" என்ற ஒரு தலைப்பிலான அறிக்கை தமிழ்நாடு மாநில திட்டமிடல் ஆணையத்தால் தயாரிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது.
- நகர்ப்புற விரிவாக்கம், காடழிப்பு மற்றும் மாறிவரும் நிலப் பயன்பாடு ஆகியவற்றால் ஏற்படும் அதிகரித்து வரும் வெப்பநிலையானது, மக்கள், சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றை அதிகரித்து வரும் ஒரு ஆபத்தில் ஆழ்த்துகிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது.
- சென்னை (2015 ஆம் ஆண்டு நிலவரப்படி சுமார் 74% கட்டமைக்கப்பட்ட பரப்பளவைக் கொண்டது), கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் போன்ற தொகுதிகள் குறிப்பிடத்தக்க நகர்ப்புற விரிவாக்கத்தைக் கண்டன.
- பகுப்பாய்வு செய்யப்பட்ட 389 தொகுதிகளில், 94 தொகுதிகளின் வெப்பநிலையில் மிக கடுமையான நீண்டகால அதிகரிப்பு பதிவாகின, அதே நேரத்தில் 64 தற்போது தீவிர வெப்ப அழுத்தத்தை எதிர்கொண்டு வருகின்றன.
- குறிப்பிடத்தக்க வகையில், சென்னை, கரூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய பகுதிகள் உட்பட 25 தொகுதிகள் இரண்டு வகைகளிலும் அடங்கும், இதனால் அவை தமிழ் நாட்டில் மிகவும் பாதிக்கப்படக் கூடிய இடங்களாக உள்ளன.
- கொடைக்கானலில் 0.7°C மற்றும் திருத்தணியில் 1.2°C வரை உயர்வு பதிவாகியதுடன்

உயரமான பகுதிகளிலும் குறிப்பிடத்தக்க வெப்பமயமாதல் பதிவாகின.

- 2050 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாடு மாநிலமானது ஆண்டுதோறும் சுமார் 0.9°C முதல் 2.7°C வரையிலான காற்று வெப்பநிலை அதிகரிப்பை எதிர்கொள்ளக் கூடும்.

# தேசியச் செய்திகள்

## இந்தியப் பிரதமரின் பிரேசில் பயணம்

- இந்தியப் பிரதமரின் பிரேசில் பயணத்தின் போது, அந்நாட்டின் மிக உயரிய குடிமை விருதான கிராண்ட் காலர் ஆஃப் தி நேஷனல் ஆர்டர் ஆஃப் தி சதர்ன் கிராஸ் விருது வழங்கப் பட்டது.
- மேலும், இந்த வருகையின் போது இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் ஆறு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.
- அவை பாதுகாப்பு, எண்ணிம உள்கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வேளாண் துறை மற்றும் அறிவுசார் சொத்து ஆகியவற்றில் ஒத்துழைப்பை உள்ளடக்கியது.
- இரு நாடுகளும் ஐந்து ஆண்டுகளுக்குள் (2030) 20 பில்லியன் டாலர் மதிப்பிலான இரு தரப்பு வர்த்தக இலக்கை நிர்ணயித்துள்ளன.




# சர்வதேசச் செய்திகள்

## தீவிரவாத நிதியுதவி அபாயங்கள் குறித்த FATF அமைப்பின் புதிய மேம்பாடு

- தீவிரவாத நிதியளிப்பு அபாயங்கள் குறித்த மிகவும் விரிவான புதிய மேம்பாடு என்ற தலைப்பில் அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- நிதியியல் நடவடிக்கைப் பணிக்குழு ஆனது முதன்முறையாக அதன் அறிக்கையில் அரசின் நிதி ஆதரவு பெறும் தீவிரவாதம் குறித்த ஒரு தனிப் பகுதியைச் சேர்த்துள்ளது.
- தீவிரவாத அமைப்புகளானது, இணைய வழி வணிகத் தளங்கள் மற்றும் இயங்கலை வழியில் பண வழங்கீட்டுச் சேவைகளை தவறாகப் பயன்படுத்துவது குறித்து இது கவலைகளை எழுப்பியது.
- பணமோசடி மற்றும் தீவிரவாத நிதியளிப்பு குறித்த இந்தியாவின் 2022 ஆம் ஆண்டு

தேசிய இடர் மதிப்பீடு (NRA) ஆனது அரசின் நிதி ஆதரவு பெறும் தீவிரவாதத்தினை ஒரு முக்கிய கவலையாகக் குறிப்பிட்டது.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் சேவை பரிமாற்றம் சார் வர்த்தகம் 2024/25

TABLE 1

INDIA'S 'VISIBLE' VERSUS 'INVISIBLE' EXPORTS

| | Goods Exports | Invisibles Receipts | Services Exports | Private Transfers |
|---|---|---|---|---|
| 2003-04 | 66.29 | 53.51 | 26.87 | 22.18 |
| 2013-14 | 318.61 | 233.57 | 151.81 | 69.64 |
| 2014-15 | 316.55 | 241.65 | 158.11 | 69.82 |
| 2015-16 | 266.37 | 235.04 | 154.31 | 65.59 |
| 2016-17 | 280.14 | 242.05 | 164.20 | 61.30 |
| 2017-18 | 308.97 | 283.41 | 195.09 | 69.13 |
| 2018-19 | 337.24 | 306.48 | 208.00 | 76.40 |
| 2019-20 | 320.43 | 321.71 | 213.19 | 83.20 |
| 2020-21 | 296.30 | 307.25 | 206.09 | 80.19 |
| 2021-22 | 429.16 | 369.6 | 254.53 | 89.13 |
| 2022-23 | 456.07 | 465.8 | 325.33 | 112.47 |
| 2023-24 | 441.44 | 501.42 | 341.06 | 118.71 |
| 2024-25 | 441.79 | 576.54 | 387.54 | 135.43 |

TABLE 2

A DELICATE BALANCE

| | Goods Trade Balance | Invisibles Balance | Current Account Balance |
|---|---|---|---|
| 2013-14 | -147.61 | 115.31 | -32.30 |
| 2014-15 | -144.94 | 118.08 | -26.86 |
| 2015-16 | -130.08 | 107.93 | -22.15 |
| 2016-17 | -112.44 | 98.03 | -14.42 |
| 2017-18 | -160.04 | 111.32 | -48.72 |
| 2018-19 | -180.28 | 123.03 | -57.26 |
| 2019-20 | -157.51 | 132.85 | -24.66 |
| 2020-21 | -102.15 | 126.06 | 23.91 |
| 2021-22 | -189.46 | 150.69 | -38.77 |
| 2022-23 | -265.29 | 198.24 | -67.05 |
| 2023-24 | -244.91 | 218.8 | -26.11 |
| 2024-25 | -287.21 | 263.85 | -23.37 |

*Amt. in ($ billion) Source: Reserve Bank of India.*


- 2003-04 மற்றும் 2013-14 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியாவின் சரக்குப் பொருட்களின் ஏற்றுமதியானது சுமார் ஐந்து மடங்கு உயர்ந்து, சுமார் 66.3 பில்லியன் டாலரிலிருந்து 318.6 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- அதன் பிறகு, அது கிடைமட்ட நிலையை அடைந்து சரிவு மற்றும் உயர்வைக் கண்டது.
- 2022-23 ஆம் ஆண்டிற்குப் பிறகு, இந்தியாவின் சரக்குகள் ஏற்றுமதியானது 2023-24 ஆம் ஆண்டில் 441.4 பில்லியன் டாலராகவும், 2024-25 ஆம் ஆண்டில் 441.8 பில்லியன் டாலராகவும் மீண்டும் சரிந்துள்ளது.
- மறுபுறம், "சேவைப் பரிமாற்றம் சார் வர்த்தகத்திலிருந்து" பெறப்பட்ட வருவாய் ஆனது 2024-25 ஆம் ஆண்டில் 576.5 பில்லியன் டாலராக உயர்ந்தது.
- இது 2003-04 ஆம் ஆண்டில் 53.5 பில்லியன் டாலராக இருந்தது.
- சேவை சார் வர்த்தகத்தில் சேவைகள் ஏற்றுமதி, பன்னாட்டுப் பண பரிமாற்றம் மற்றும் பிற நேரடிப் பரிவர்த்தனைகள் சாராதவை அடங்கும்.

- 2003-04 ஆம் ஆண்டில் 12.8 பில்லியன் டாலராக இருந்த மென்பொருள் சேவைகள் ஆனது 2024-25 ஆம் ஆண்டில் 180.6 பில்லியன் டாலராக அதிகரித்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சிறிய பிளாஸ்மா சுழல்கள்


- சூரியனின் கீழ் மட்ட மண்டலத்தில் ஒரு சிறிய மற்றும் குறுகிய கால சுழல்கல் காணப் படுவதை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இவை சூரியன் காந்த ஆற்றலை எவ்வாறு சேமித்து வெளியிடுகிறது என்பது குறித்த தகவலை வெளிப்படுத்தக்கூடும்.
- இந்த சிறிய வெப்பப் பகுதி/கொரோனல் சுழல்கள், 3,000–4,000 கிலோ மீட்டர் நீளம் மற்றும் 100 கிலோ மீட்டர் அகலம் மட்டுமே கொண்டதாகும்.
- அவற்றின் அளவு மற்றும் குறுகிய ஆயுட்காலம் (சில நிமிடங்கள் மட்டுமே நீடிக்கும்) காரணமாக அவை இதற்கு முன்னர் கண்டறியப் படவில்லை.




## வேரா C ரூபின் ஆய்வகம்

- சிலியில் உள்ள இந்த ஆய்வகமானது அதன் முதல் சோதனை படங்களை வெளியிட்டு உள்ளது.
- ஒவ்வொரு இரவும் மில்லியன் கணக்கான வானியல் நிகழ்வுகள், குறுங்கோள்கள் மற்றும் கரும்பொருள் சமிக்ஞைகளைக் கண்டறிவதன் மூலம் வானியலை மாற்றும் திறனை இது காட்டுகிறது.
- இது சிலி ஆண்டிஸில் உள்ள செரோ பச்சோன் மலையின் உச்சியில் கடல் மட்டத்தில் இருந்து 8,684 அடி உயரத்தில் அமைந்துள்ளது.
- இந்தத் தொலைநோக்கியானது உலகின் மிகப்பெரிய எண்ணிம (டிஜிட்டல்) ஒளிப்படக் கருவியினைக் கொண்டுள்ளது மற்றும் சுமார் 3,200 மெகாபிக்சல்கள் என்ற மிக அதிக

அளவிலான தெளிவுத் திறனைக் கொண்டுள்ளது.




## பூமியின் சுழற்சி வேகத்தில் அதிகரிப்பு

- பூமியானது வழக்கத்தை விட வேகமாகச் சுழலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்ற நிலையில் இது சற்று குறுகிய நாட்களுக்கு வழி வகுக்கும்.
- 2025 ஆம் ஆண்டின் ஜூலை 09, ஜூலை 22 மற்றும் ஆகஸ்ட் 05 ஆகிய தேதிகளில் சந்திரனின் நிலையானது பூமியின் சுழற்சியை பாதிக்கும்.
- இது ஒவ்வொரு நாளையும் சுமார் 1.3 முதல் 1.51 மில்லி வினாடிகள் வரை குறைவாக மாற்றுகிறது.
- முன்னதாக 2023 ஆம் ஆண்டு ஜூலை 05 ஆம் தேதியன்று, பூமி தனது சுழற்சியை அதன் இயல்பை விட 1.66 மில்லி வினாடிகள் விரைவாக நிறைவு செய்தது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## உருகும் பனிப்பாறைகள் மற்றும் எரிமலை வெடிப்புகள்

- பருவநிலை நெருக்கடியானது எரிமலை வெடிப்புகளில் ஒரு எழுச்சியைத் தூண்டக் கூடும் என்று ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

- உருகும் பனிப் பாறைகள் மற்றும் பனிக்கட்டிகள் ஆகியன நிலத்தடிப் பாறைக் குழம்பு அறைகள் மீதான அழுத்தத்தைக் குறைக்கின்றன.
- இந்த நிகழ்வு ஆனது ஐஸ்லாந்து பகுதியில் பதிவானது.
- பனிப்பாறைகள் அவற்றின் அடியில் உள்ள எரிமலைகளில் தோன்றும் வெடிப்புகளின் அளவை ஒடுக்க முனைகின்றன.
- ஆனால் பருவநிலை மாற்றம் காரணமாக இப்பனிப் பாறைகள் உருகும் போது, இந்த எரிமலைகள் அடிக்கடியும் தீவிரமாகவும் வெடிக்கின்றன.




# மாநிலச் செய்திகள்

## சத்தீஸ்கர் துணை ஆயுதப்படை சட்டம்




- 2011 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், மாவோயிஸ்ட் கிளர்ச்சியை எதிர்கொள்வது தொடர்பான எந்தவொரு நடவடிக்கைகளிலும் சிறப்புக் காவல் அதிகாரிகளை (SPO) பயன்படுத்துவதை நிறுத்துமாறு சத்தீஸ்கர் மாநிலத்திற்கு உச்ச நீதிமன்றம் உத்தரவு

இட்டது.

- ❖ பின்னர் மாநில அரசானது துணை ஆயுதக் காவல் படைச் சட்டத்தை நிறைவேற்றி, பொது ஒழுங்கைப் பேணுவதிலும் மாவோயிஸ்ட் வன்முறையை நன்கு எதிர்ப்பதிலும் பாதுகாப்புப் படைகளுக்கு உதவ ஒரு துணைப் படையை உருவாக்க என அங்கீகாரம் அளித்தது.
- ❖ அங்கு மாவோயிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகளில் சிறப்புக் காவல் அதிகாரிகளை (SPO) பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் முந்தைய உத்தரவிற்குப் பிறகு, மாநில அரசு சட்டம் இயற்றியதை எதிர்த்து மனு தாக்கல் செய்யப்பட்டது.
- ❖ இந்த வழக்கு ஆனது நந்தினி சுந்தர் & பிறர் Vs சத்தீஸ்கர் மாநில அரசு இடையிலான வழக்கு என அழைக்கப்படுகிறது.
- ❖ தற்போது, உச்ச நீதிமன்றமானது 2011 ஆம் ஆண்டு துணை ஆயுதக் காவல் படைச் சட்டத்தின் செல்லுபடித் தன்மையினை உறுதி செய்துள்ளது.
- ❖ அத்தகையச் சட்டங்கள் நீதித்துறை முடிவுகளை மாற்றினாலும் அல்லது மீறினாலும், அரசியலமைப்பு வரம்புகளுக்குள் சட்டங்களை இயற்றுவதற்கான சட்டமன்றத்தின் முழு அதிகாரத்தையும் நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

# முக்கிய தினங்கள்

## தேசிய பட்டயக் கணக்காளர்கள் தினம் 2025 - ஜூலை 01

- ❖ இத்தினமானது, 1949 ஆம் ஆண்டு இந்தியப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் (ICAI) நிறுவப்பட்டதைக் குறிக்கிறது.
- ❖ இது இந்தியப் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 1949 ஆம் ஆண்டு பட்டயக் கணக்காளர்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.
- ❖ இந்தத் தினமானது பட்டயக் கணக்காளர்களால் வழங்கப்படும் அர்ப்பணிப்பு, அறிவு மற்றும் தார்மீகக் கொள்கைகளை கௌரவிக்கிறது.




## சரக்கு மற்றும் சேவை வரி தினம் 2025 - ஜூலை 01

- ❖ 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், அரசியலமைப்பு (101வது திருத்தம்) சட்டம் ஆனது பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.
- ❖ இது மத்திய அரசிற்கு GST வரியை விதிக்கவும் வசூலிக்கவும் அதிகாரம் அளித்தது.
- ❖ இந்தியாவில் சரக்கு மற்றும் சேவை வரியானது (GST) 2017 ஆம் ஆண்டு ஜூலை 01 ஆம் தேதியன்று அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது.

- கலால் வரி, சேவை வரி, மதிப்பு கூட்டப்பட்ட வரி (VAT) மற்றும் இதர வரிகள் போன்ற மத்திய மற்றும் மாநில அரசுகளால் விதிக்கப்படும் பல மறைமுக வரிகளுக்கு ஒரு மாற்றாக GST அமைந்தது.
- இது வரி அமைப்பில் இந்தியா முழுவதும் மிக சீரான தன்மையைக் கொண்டு வந்து, வரிகளின் தொடர்/அடுக்கு விளைவை நீக்கியது.




## உலக விளையாட்டுத் துறை பத்திரிகையாளர்கள் தினம் 2025 - ஜூலை 02




- விளையாட்டுத் துறையின் பெரும் மேம்பாட்டிற்காக வேண்டி விளையாட்டுத் துறை சார் பத்திரிகையாளர்கள் ஆற்றும் சேவைகளைக் கொண்டாடுவதை இது முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விளையாட்டுத் துறை சார் பத்திரிகை என்பது விளையாட்டுத் துறை தொடர்பான எந்தவொரு தகவல் அல்லது தலைப்பு தொடர்பான விவகாரங்களிலும் கவனம் செலுத்தும் ஒரு வகையான செய்தி அறிக்கையிடல் ஆகும்.
- அச்சிடல், ஒளிபரப்பு மற்றும் இணையம் உள்ளிட்ட பல்வேறு ஊடகத் தளங்களில் விளையாட்டுத் துறை பத்திரிகையாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

- சர்வதேச விளையாட்டுத் துறை பத்திரிகையாளர் சங்கம் (AIPS) ஆனது 1994 ஆம் ஆண்டில் உலக விளையாட்டு துறை பத்திரிகையாளர் தினத்தை நிறுவியது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Championing Fair Play: Reporting with Integrity and Impact" என்பதாகும்.

## அமெரிக்கச் சுதந்திர தினம் 2025 - ஜூலை 04




- 2025 ஆம் ஆண்டானது 1776 ஆம் ஆண்டில் சுதந்திரப் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட 249 வது ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.
- இத்தினமானது பிரிட்டிஷ் காலனிகளை பிரித்தானிய பேரரசிடம் இருந்து பிரிந்ததைக் குறிக்கிறது.
- சுதந்திரப் போராட்டம் ஆனது 1775 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- 13 அமெரிக்க காலனிகள் மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் கீழ் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலையை நாடின.

## சர்வதேசக் கூட்டுறவு தினம் 2025 - ஜூலை 05




- இது ஆண்டுதோறும் ஜூலை மாதத்தின் முதல் சனிக்கிழமையன்று கொண்டாடப் படுகிறது.
- சர்வதேசக் கூட்டுறவு கூட்டணி (ICA) ஆனது முதன்முதலில் இத்தினத்தினை 1923 ஆம் ஆண்டில் கொண்டாடியது.
- 1995 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையானது இந்தத் தினத்தினை அதிகாரப்

பூர்வமாக அங்கீகரித்தது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு: "Cooperatives: Driving Inclusive and Sustainable Solutions for a Better World" என்பதாகும்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, 2025 ஆம் ஆண்டினை சர்வதேசக் கூட்டுறவு ஆண்டாகவும் (IYC2025) அறிவித்தது.

## உலக விலங்கு வழி பரவும் நோய்கள் தினம் 2025 - ஜூலை 06




- இத்தினமானது விலங்கு வழி நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் அவற்றின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1885 ஆம் ஆண்டு இந்த நாளில் தான் லூயிஸ் பாஸ்டர் வெற்றிகரமான முதல் ரேபிஸ் தடுப்பூசியை செலுத்தினார்.
- மனிதர்களில் பரவும் 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொற்று நோய்கள் ஆனது விலங்கு வழி தொற்று மூலம் பரவுகின்றன என்பதோடு மேலும் சுமார் 75% வளர்ந்து வரும் தொற்று நோய்கள் விலங்குகளிடமிருந்து உருவாகின்றன.
- "zoonoses" (zoonosis என்பதன் பன்மை) என்ற சொல் ஆனது Zoon (விலங்கு) மற்றும் Nosos (நோய்) ஆகிய கிரேக்கச் சொல்லிலிருந்து உருவானது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★